**31.10.2022**

**OS.No. 311/2021 DW : 1, திரு. மல்லிகா**

**குறுக்கு விசாரணை...**

பிரதிவாதியின் தாயார் பெயர் புஷ்பா. பிரதிவாதியின் தாயாரிடம் ரூபாய் 6 லட்சத்து 50 ஆயிரத்தை 31.10.2020ல் கடன் கொடுத்தேன். கடன் கொடுப்பதற்கு 3 வருடத்திற்கு முன்பிருந்தே அவர் என் வீட்டில் வாடகைக்கு இருந்த வகையில் அவரை எனக்கு தெரியும். 2019ல் அவர் வாடகைக்கு வந்தார். அவர் வாடகைக்கு வருவதற்கு முன்னரும் அவரை எனக்கு தெரியும். புஷ்பா என்பவரிடம் நான் ஏற்கனவே பேசியிருக்கிறேன். பிரதிவாதி வியாபாரம் செய்வதற்காக என்னிடம் கடன் வாங்கினார். புஷ்பா என்பவரிடம் கடனை ரொக்கமாக கொடுத்தேன். அவர் மாதம் ரூபாய் 5000/- வட்டி கொடுத்தார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் முதலாவது பக்கத்தில் கண்டுள்ள விவரங்கள் சரியாவை தான். வருடம் மட்டும் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 6 லட்சத்து 50 ஆயிரம் போக புஷ்பா என்னிடம் வேறு கடன் வாங்கியிருக்கிறாரா என்று கேட்டால் அவ்வப்போது தொகைகளை வாங்குவார், திரும்ப கொடுப்பார். புஷ்பாவிற்கும், பிரதிவாதிக்கும் இடையே சுமூகமான உறவுமுறை இருந்ததில்லை. பிரதிவாதி அவரது தாயாரை பார்க்க வரவில்லை. புஷ்பா கொரானாவில் 13.05.2021ல் இறந்துவிட்டார். மருத்துவமனையில் வைத்து இறந்துவிட்டார். 10.05.2021ல் மருத்துவமனைக்கு சென்றார். அவர் மருத்துவமனைக்கு சென்றபோது நான் பார்க்கவில்லை. அவருடன் ஒரு டிரைவரும், அவரது அக்கா மகனும் உடன் சென்றதாக

சொன்னார்கள். 10.05.2021ல் ரூபாய் 20 ஆயிரத்தை நான் என் மகளிடம் கொடுத்தேன். என் மகளிடமிருந்து புஷ்பா வாங்கிசென்றார். தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும் என்னை காப்பாற்று என்றும் புஷ்பா என்னிடம் கைபேசியில் பணம் கேட்டதால் நான் அந்த பணத்தை கொடுத்தேன். என்னுடைய மகள் கடம்பத்தூரில் இருக்கிறார். 10ம் தேதி காலையில் புஷ்பா என்னிடம் பணம் கேட்டார். அப்போது என் மகள் என் வீட்டில் இருந்தார். பணத்தை ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்தேனா என்று கேட்டால் என் வீட்டில் சீட்டுபணம் ஏற்கனவே இருந்தது. அவர் இறந்த பின்னர் பிரதிவாதி வீட்டில் உள்ள சாமான்களை போலீஸாருடன் வந்து எடுத்து சென்றுவிட்டார். பிரதிவாதி என்மீது திருவாளங்காடு காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். புஷ்பாவின் பொருட்களை கொடுக்கமாட்டேன் என்று நான் சொல்லியதாக புகார் கொடுத்தார். ஆனால் நான் அவ்விதம் சொல்லவில்லை. புஷ்பா உயிருடன் இருக்கும்போது அவர் வாங்கிய கடன்களை பற்றி பிரதிவாதியிடம் சொன்னேனா என்று கேட்டால் அவர்களுக்கிடையே உறவுமுறை சரியாக இல்லாமல் இருந்ததால் நான் சொல்லவில்லை. புஷ்பா உயிருடன் இருந்தவரை பிரதிவாதியை நான் பார்த்ததில்லை. அவர் இறந்தபின்னர் தான் பார்த்தேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வேறு 5 தொகைகளை எதற்காக கொடுத்தேன் என்று கேட்டால் புஷ்பா வியாபாரம் செய்வதற்காக என்னிடம் வாங்கினார். புஷ்பா என்பவர் தான் வாசாஆ1ஐ தயார் செய்து கொண்டுவந்தார். அதில் உள்ள

விவரங்கள் எனக்கு தெரியும். வாசாஆ1ல் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் என்னுடன் வேலை பார்ப்பவர்கள் ஆவார்கள். நான் அரக்கோணத்தில் வேலை பார்க்கிறேன். வாசாஆ1ல் உள்ள 1வது சாட்சி அரக்கோணத்தில் தான் என்னுடன் வேலை பார்க்கிறார். கடன்களை புஷ்பா என்பவர் வாங்கிய பின்னர் அவர் தான் வாசாஆ1ஐ தயார் செய்துகொண்டு வந்தார். ரூபாய் 6 லட்சத்து 50 ஆயிரம், ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரம், ரூபாய் 2 லட்சத்தை வாங்கிய பின்னர் புஷ்பா வாசாஆ1ஐ கொண்டு வந்தார். 19.11.2020ல் ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரத்தை என்னிடம் வாங்கினார். தற்போது சாட்சி வாசாஆ1ஐ பார்த்து சாட்சியளிக்கிறார். ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரம் வாங்குவதற்கு முன்னரே புஷ்பா வாசாஆ1ஐ தயார் செய்து கொண்டுவந்தார். அதன்பின்னர் பணம் வாங்கிகொண்டு வாசாஆ1 எழுதி கொடுத்தார். அதன்பின்னரும் புஷ்பா என்பவர் பணம் வாங்கினார். தேதி ஞாபகமில்லை. ரூபாய் 1 லட்சத்து 50 ஆயிரத்தை வாங்கும்போது புஷ்பா என்ன எழுதி கொடுத்தார் என்று கேட்டால் பணம் வாங்கி கொண்டிருக்கிறாயே ஆவணம் கொடுக்கவில்லையே என்று கேட்டதற்கு புஷ்பா அவருடைய சொத்து பத்திரத்தை கொடுத்தார். புரோநோட்டை கொண்டுவந்த அன்று சாட்சி எப்படி வந்தார் என்று கேட்டால் என் வீட்டில் ஷீட் போடுவதற்காக அமிர்தராஜ் என் வீட்டிற்கு வந்திருந்தார். புரோநோட்டில் முதலில் அமிர்தராஜ் கையொப்பம் போட்டார். பின்னர் என் மகன் கையொப்பம் போட்டார். புஷ்பா என்னிடம் வாங்கிய மொத்த கடன் தொகை ரூபாய் 17 லட்சத்து 40 ஆயிரம் ஆகும். அந்த

பணங்கள் முழுவதையும் அவ்வப்போது நான் ரொக்கமாக தான் கொடுத்தேன். எனக்கு எப்படி அவ்வளவு பணம் வந்தது என்று கேட்டால் என் மகளின் மாமனார் என்னுடன் வேலை பார்த்தார். அவர் 2019ல் பணிஓய்வு பெற்றபோது அவருக்கு ரூபாய் 30 லட்சம் கிடைத்தது. தன் 3 குழந்தைகளுக்கு தலா ரூபாய் 10 லட்சம் கொடுத்த வகையில் என் மருமகனுக்கு ரூபாய் 10 லட்சம் கிடைத்தது. அதிலிருந்து தான் நான் புஷ்பாவிற்கு பணம் கொடுத்தேன். மீதி பணத்தை நகை வைத்தும் மற்றும் சீட்டுபணம் எடுத்தும் கொடுத்தேன். அதுபோக நானும் அரக்கோணம் ரயில்வேயில் பார்த்து வருகிறேன். நான் நகை வைத்தற்கான ஆவணங்கள் என்னிடம் இருக்கிறது. ரூபாய் 6 லட்சத்து 50 ஆயிரத்தை திரும்ப கொடுக்காத போது மேலும் தொகைகளை எந்த நம்பிக்கையில் கொடுத்தேன் என்று கேட்டால் புஷ்பா அவரது சொத்தை விற்று தருவதாக சொன்னதால் நான் பணம் கொடுத்தேன். அவர் என்னிடம் கொடுத்த ஆவணம் வீட்டு பத்திரம் ஆகும். அதன் அசல் ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் பிழை திருத்தல் ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதை நான் அவர் என்னிடம் கொடுத்தார். புஷ்பா என்பவர் என்னிடம் பணம் எதையும் வாங்கவில்லை என்றும் அவர் இறந்தபின்னர் நானாகவே ஆவணங்களை தயார் செய்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. அவர் கொரானாவில் இறந்தபின்னர் அவர் குடியிருந்த வீட்டை பூட்டி வைத்துக்கொண்டேன் என்றால்சரியல்ல. அவர் தான் வீட்டை பூட்டிவிட்டு மருத்துவமனைக்கு சென்றார். அவருக்கும் பிரதிவாதிக்கும் இடையே உறவுமுறை

சரியில்லை என்றும் ஆகவே புஷ்பா இறந்தபின்னர் வீட்டில் உள்ள ஆவணங்களை எடுத்து வைத்துக் கொண்டு போலியான ஆவணங்களை தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே தான் அவருடைய உரிமை மூல ஆவணங்களை என்னிடம் கொடுக்கவில்லை என்றும் ஆகவே கிடைத்த ஆவணத்தை வைத்துகொண்டு வாசாஆ1ஐ தயார் செய்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் புஷ்பாவிற்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரியல்ல. ஆகவே தான் முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.